பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 13 வியாழக்கிழமை (29-08-1991) UTHAYAN — A Livaly National Tamil Daily கதிர்: 268

# புலிகள் பேச்சு நடத்த தயாராக இருப்பது ஏன்?

## மாத்தயா விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 29

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருப்பது ஏன்? — இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) விளக்கமளித்துள்ளார்.

உதயன் அரசியற் செய்தியாளருக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இந்த விளக்கத்தை தந்தார்.

இந்தப் பேட்டியின் இரு பகுதிகள் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் உதயனில் வெளியாகியிருந்தன.

பேட்டியின் இறுதிப் பகுதி வருமாறு:-

கேள்வி:- பேச்சுக்கு அரசு இணங்கினாலும், அது தமிழீழம் நிறுவுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இணங்காது என்பது நிச்சயம். அப்படியானால் தமிழீழத்திற்குக் குறைந்த ஒன்றை ஏற்பதற்கு நீங்கள் உடன்படுவீர்களா? அல்லது கடைசிவரை இலட்சியம் நிறைவேறப் போராடுவது தான் ஒரே வழி என்று செயற்படுவீர்களா?

பதில்: தமிழீழத் தனியரசு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சிங்களவருக்கு 12 ஆயிரம் புதிய வீடுகள்!

### அவசர அவசரமாக அமைப்பு

கொழும்பு, ஆக. 29

திருமலை மாவட்டத்தில் 12 ஆயிரம் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதற்காக மிகப் பெரிய வீடமைப்புத் திட்டம் ஒன்று அவசர அவசரமாக அமைக்கப்பட்டு வருகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவை அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால், திருமலை அரசாங்க அதிபரின் உதவியுடன் இந்த வீடுகள் கட்டப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

திருமலை நகரம், கிண்ணியா, கந்தளாய், மூதூர், தம்பலகமம், பதவிசிறிபுர, சேருவில, கோமரன்கடவல,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர்களை நியமிப்பதில் தில்லு முல்லு!

### ஓய்வுபெற்றுச் செல்லும் பிரதம நீதியரசர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 29

ஸ்ரீலங்காவின் பிரதம நீதியரசர் நியமனங்களில் ஒழுங்கீனம் படி நிகழ்ந்திருப்பதாக கடந்த 20 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற பிரதம நீதியரசர் திரு. பாரிந்த ரணசிங்க குற்றம் சுமத்தியிருக்கிறார்,

அவர் ஓய்வு பெறுவது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய பிரிவுபசார விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

''ஸ்ரீலங்கா குடியரசான பின்னர் இரண்டு தடவைகள் —1977 இலும் 1988 இலும்— பிரதம நீதியரசர்களாக நியமிக்கப்படவேண்டியவர்கள்— தகுதியிருந்தும்— நியமிக்கப்படவில்லை.

பிரதமர் நீதியரசர் பதவிக்கு என்னை அழைப்பார்கள் என எதிர்பார்த்த காலத்துக்கு 12 மாதங்களுக்கு முந்தியே என்னை அழைத்து விட்டார்கள்.

முன்னர்— பதவியில் இருந்தபோது— எனது வாய் கட்டப்பட்டிருந்தது. இப்போது ஓய்வு பெற்றுவிட்டேன். இவற்றை எல்லாம் எழுத்தில் கொண்டு வர முடிவு செய்து விட்டேன்''—

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் தங்கியிராத அகதிகளுக்கும் நிவாரணம்

### அமைச்சு அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களுக்கு வெளியே உறவினர்கள் வீட்டில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்து வழங்கும்படி யாழ் அரச அதிபர் கேட்கப்பட்டிருக்கிறார்.

இதற்கான உத்தரவை புனர்வாழ்வு அமைச்சு யாழ் செயலகத்துக்கு அனுப்பியுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை அரசு திடீரென நிறுத்தியதும் அதனைத் தொடர்ந்து பல்வேறு மட்டங்களிலும் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்ததும் தெரிந்தவையே. (இ-5)

## ஸ்ரீலங்கா படைக்கு ஜெட்: இந்தியாவுக்கு அதிருப்தி

கொழும்பு, ஆக. 29

ஸ்ரீலங்கா விமானப்படை, சீனாவிடமிருந்து எவ். 7 ரக ஜெட் யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்யவிருப்பது குறித்து இந்தியத் தரப்பில் அதிருப்தி நிலவுவதாகச் சொல்லப்படுகிறது.

கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள எவ். 7 ரக ஜெட் விமானங்கள், நாட்டின் வான் வழியில் ரோந்து புரியவும், வான் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் எதிரி விமானங்களை வழிமறித்துத் தாக்கவும் வல்லமை கொண்டவையாகும்.

விமானப்படை தனது பலத்தை மேலும் அதிகரிக்கும் பொருட்டு பல புதிய ரக விமானங்களை வாங்க உத்தேசித்திருப்பது தெரிந்ததே. அதன் பொருட்டு டாங்கி எதிர்ப்புச் சக்தி கொண்ட ''85-ஐ. எவ். வி''

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குள தாக்குதலில் நான்கு படையினர் பலி!

### புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 29

திருகோணமலை மாவட்டம் வேப்பங் குளத்தில் நேற்று விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் பல மீட்கப்பட்டன.

வேப்பங் குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியேறி 10 ஆம் கட்டை முகாமை நோக்கி ரோந்து சென்ற படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

★ ரீ 56 - 2 ரகத் துப்பாக்கி — 3

★ அவற்றுக்கான ரவைக் கூடுகள் — 9

★ ரவைகள் — 370

- ஆகியவை இத்தாக்குதலின் போது படையினரிடம் இருந்து புலிகளால் கைப்பற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 29

நேற்று மாலை 6-00 மணி அளவில் விளான், இளவாளை பகுதிகளை நோக்கியும் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கியும் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (இ-16)

### 13 பேர் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு

மொஸ்கோ, ஆக. 29

தோல்வியில் முடிந்த சோவியத் புரட்சியை நடத்திய பதின்மூன்று பேர் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டை மொஸ்கோ அரசு வழக்குத் தொடருநர் சுமத்தியுள்ளார்.

தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்கு ஆகக் கூடிய தண்டனையாக மரணதண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## ப. நோ. கூ. சங்கங்களின் பொருள் விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படவிருக்கும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

செயலக புனர்வாழ்வுப் பிரிவு திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் இதனைத் தெரிவித்தார்.

அரிசி ஒரு கிலோ 13 ரூபா 15 சதத்துக்கும், மா ஒரு கிலோ 12 ரூபா 25 சதத்துக்கும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் — சங்கங்கள் போக்குவரத்துச் செலவுடன் விற்பனை செய்யலாம் என பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வழங்கப்படும் பொருள்களை 'அ' 'உ' உலர் உணவு அட்டை வைத்திருப்போருக்கு பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்யுமாறும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு 500 கோடி ரூபா நிதி உதவி

### உலக வங்கி வழங்கியுள்ளதாம்!

கொழும்பு, ஆக. 29

வடக்கு – கிழக்கு மாகாண அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள உலக வங்கி ஐந்நூறு கோடி ரூபாவை தந்துள்ளது. சகஜநிலை அம்மாகாணத்தில் திரும்பியதும் அந்நிதி உதவி பயன்படுத்தப்படும்.

அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அடையாளங் காணப்பட்ட சில அபிவிருத்தி வேலைகளைச் செயற்படுத்தவென்றே உலக வங்கி நிதி ஒதுக்கியுள்ளது.

ஆகவே அந்த நிதியை வேறு மாகாணங்களில் அபிவிருத்தி வேலைகளை அமுல் நடத்துவதற்கு நாம் பயன்படுத்தமுடியாது.

இப்படி அமைச்சர் திரு. அதிகாரி அந்தச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார். (த-எ)

## போல்டிக் குடியரசுகளை இந்தியா அங்கீகரிக்காது

### பொறுத்திருந்து பார்க்க முடிவு

புதுடில்லி, ஆக. 29

மூன்று போல்டிக் குடியரசுகளையும் தனி நாடுகளாகத் தற்போதைக்கு இந்தியா அங்கீகரிக்காது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

பிரிந்து செல்லும் குடியரசுகள் சோவியத் யூனியனுடன் உடன்பாடு ஒன்றுக்கு வரும் வரை போல்டிக் குடியரசுகள் விஷயத்தில் தீர்மானம் எதையும் இந்தியா எடுக்காது என்றும் புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் போல்டிக் குடியரசுகளை அங்கீகரிப்பதில் வெளிநாடுகள் அவசரம் காட்டிவிட்டன என்று ஜனாதிபதி கோர்பச்சேவ் நேற்றுக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கே. ஜி. பியும் கலைப்பு!

சோவியத் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பியின் நிர்வாக அமைப்பைக் கலைக்கும் ஆணையை ஜனாதிபதி கோர்பச்சேவ் நேற்றுப் பிறப்பித்தார்.

கே. ஜி. பி. நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த நூற்றுக் கணக்கான குருப்புகளை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரும் உத்தரவையும் ஜனாதிபதி பிறப்பித்திருக்கிறார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (எ-5)

## சோவியத் அரசும் கலைக்கப்பட்டது!

மொஸ்கோ, ஆக. 29

முழு சோவியத் அரசாங்கமும் கலைக்கப்பட்டுள்ளது.

மொஸ்கோவில் உள்ள சமஷ்டி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோர்பச்சேவ் இதனை அறிவித்தார்.

இதற்கு முன் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சோவியத் அரசு கலைப்பு பற்றி கோர்பச்சேவ் அறிவிக்கையில், சமீபத்திய புரட்சி முயற்சியை அடுத்து அரசு மீதான நம்பிக்கையை தாம் இழந்துவிட்டதாகத் தெரிவித்தார். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

எலுமிச்சை, மா போன்ற நாற்றுக்கள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப் பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம். கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-0390]

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் – ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (இ-0290)

### சேவை

உங்களுடைய பழைய பாடசாலைப் பைகள் (School Bags), மகளிர் கைப் பைகள் (Ladies Hand Bags), பிரயாணப் பைகள் (Travelling Bags) என்பன மறுசீரமைத்துக் கொடுக்கப்படும். ராம்சன்ஸ் பிரயாணப் பொருட்கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (4268)

### தவறிவிட்டது

யாழ். போதனா வைத்திய சாலையில் வீட்டுத் திறப்புகள், கிளினிக் துண்டுகள் அடங்கிய எனது பேர்ஸ் 26-8-91 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்திடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (17968)

ச. ஆறுமுகதேவன், ச. கலாதேவன் ஆகியோரின் அடையாள அட்டைகள் 23 ஆம் திகதி சங்குப்பிட்டியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (17677)

ஆபிரகாம் ஆஞ்சலோ திரவியநாயகம் ஆகிய எனது அடையாள அட்டையும் [56318757 V] அலுவலக அடையாள அட்டையும், திறப்பும் 25-8-91 இல் கோப்பாய் சந்திக்கருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பணிமனையில் அல்லது 22/11 பாரதி ஒழுங்கை, கச்சேரி நல்லூர் றோட் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (17967)

---

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## கல்வியாண்டு 1991/1992

(பல்கலைக்கழக வசதிகள் அனைத்தும் கொண்ட அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்)

கலை முதற் தேர்வு — G. A. Q.
வணிக முதற் தேர்வு — ISt. in Com.

ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள்
01-09 1991 முதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

Registrar.
COLLEGE OF HIGHER STUDIES,
ANAIPANTHY.

மு. குறிப்பு: 1 பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகளிற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த யாழ். விரிவுரையாளர்களும், யாழ். விக்னா கல்வி நிலைய விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

[சி-0407]

---

## இலங்கை பல்கலைக்கழகங்களிற்கான வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## கல்வியாண்டு 1991/1992

யாழ்ப்பாண, பேராதனை
பல்கலைக்கழகங்களிற்கான

கலை முதற் தேர்வு - G. A. Q.
வணிக முதற் தேர்வு - 1st In Com.

ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள்
01 – 09 1991 முதல் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

க. பொ. த. பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

சிரேஷ்ட பதிவாளர்,
**விக்னா கல்வி நிலையம்,**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மு. குறிப்பு: பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த எமது நிறுவன விரிவுரையாளர்களும், College of Higher Studies, Anaipanthy விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

[சி-0410]

---

## விசேட அறிவித்தல்

கந்தர்மடம் சனசமூகநிலைய
கலை பண்பாட்டுக் கழகம்

21 - 07 – 91 இல் யாழ். கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றுவதாயிருந்த

புலவர் செ. து. தெட்சணாமூர்த்தியின்
கதை - வசனம் – நெறியாக்கத்தில் உருவான

## இந்தமண் எங்களின் சொந்தமண்

என்னும் தமிழீழ வரலாற்று நாடகம்
யாழ். கைலாசபதி கலையரங்கில்

15-9-1991 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேடையேற்றப்படும் என்பதை எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

செ. ஆனந்தம்
தயாரிப்பு நிர்வாகப் பொறுப்பாளர்.

பெரியதம்பிரான் கோயில் வீதி,
வண். வடமேற்கு,
யாழ்ப்பாணம். [17961]

---

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ். பல்கலைக்கழகம் / பேராதனை

| | |
|---|---|
| கல்வியாண்டு | 1991 / 1992 |
| கலை முதற் தேர்வு | G A. Q. |
| வர்த்தக முதற் தேர்வு | I St IN COM. |

G. S. Q. ஆகிய பாடநெறிகளுக்கான பதிவுகளை 10 - 9 - 1991 இற்கு முன் பதிவு செய்துகொள்ளவும்.

A/L இல் 3 பாடங்கள் சித்தி எய்தியவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் யாவும் ஆரம்பம்:
14 - 9 - 1991

விவரங்களுக்கு; நிர்வாகி.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(0415)

---

15 – 07 – 1991 இல் நடந்த ஆட்லறி ஷெல் தாக்குதலினால் கருகிப்போன எம்மலர்களின்

## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. கந்தசாமி பேரம்பலம்
(நெல்லை க பேரன்)
திருமதி பே. உமாதேவி
செல்வன் பே. உமாசங்கர்
செல்வி பே. ஷர்மிளா

கண்மூடித் திறந்த கணம்
உங்கள் உயிர்கள் பறிக்கப்பட்ட கதை
நம்பமுடியவில்லை......... நம்பமுடியவில்லை ......
இப்பொழுது தானே எங்களோடு பேசினீர்கள்
அதற்குள் எப்படி? கணப்பொழுதில்
எங்களை மறந்து நீங்கள் மரணித்திருக்கலாம் –
ஆனால்
உங்களை நாங்கள் மறக்க முடியாதே!

ஓர் இரவில்...... ஒரு பொழுதில் கருகிய எம் மலர்களுக்காக 30 – 08 – 1991 வெள்ளி அன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிரியை நிகழ்ச்சியிலும், மதிய போசன வைபவத்திலும் - கலந்து கொள்ள பேரனின் நண்பர்கள், அனுதாபிகள் தெரிந்தவர்களை அழைத்திடும் ....

குடும்பத்தினரும்,
சகோதரர் க. பாலேந்திரமும்.

[illegible] [சி-0394]

---

பல்கலைக்கழகங்களின்
வெளி நிலை

## பட்டப் படிப்பிற்கான பதிவுகள்

1. வர்த்தக முதற்தேர்வு (B. Com)
2. கலை முதற்தேர்வு (G. A. Q.)
3, கலைமாணி (B. A.)

குறிப்பு: பதிவுகள் சம்பந்தமான விவரங்களுக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 15 - 10 – 91 க்கு முன் தொடர்புகொள்ளவும். பதிவுகள் 05 - 10 - 91 முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

உதவிப் பதிவாளர்,
நாவலர் பட்டப் படிப்புகள் கல்லூரி,
சித்தன்கேணி.

(சி-0414)

---

## பாரதிதாசன்

## கல்வி நிறுவனம்

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 92** கலை, வர்த்தகம்

★ புதிய பிரிவு ★

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. வரதராஜன் |
| வர்த்தகம்: | பிரபல விரிவுரையாளர் |
| அளவையியல்: | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ்<br>திரு. யோகராஜா<br>திரு. சௌந்தி |
| தமிழ்: | திருமதி மீரா |
| இந்துநாகரீகம்: | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல்: | திரு. ஜோசப் |

**ஆரம்பம்: 01 - 09 - 1991**
ஞாயிறு 8.00 a.m.

### பொருளியல் – புதிய பிரிவு

பொருளியல் பகுதி II – வரவுசெலவுத்திட்டம்
பொருளியல் பகுதி I – தேசிய வருமானம்

[0418]

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 08 — 1918



மறைவு: 08 — 09 — 1990

அமரர்
வேலுப்பிள்ளை பாலகிருஷ்ணப்பத்தர்
திதி: 29 – 08 – 1991

பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த எம் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தெல்லிப்பழை கிழக்கு,
வெள்ளவாய்க்கால் ஒழுங்கை,
தெல்லிப்பழை. (4270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தெரிவுக்குழுவின் நோக்கம்!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் வழிமுறை ஒன்றைக் காணும் பொருட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட இருப்பது குறித்து,கொழும்புப் பத்திரிகைகள் தேனொழுகப் பாராட்டுகின்றன. தெரிவுக்குழு நியமிக்கப்படுவதற்கு முன்னரே, தீர்வு கிடைத்து விட்டதான நிலையில், மிகப் பெரிதாக எதிர்பார்க்கின்றன!

தென்னிலங்கையில் அரசியல் விரோதிகளாக, எதிரணிகளில் நின்று போட்டி போடும் ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சேர்ந்து தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து பிரச்சினைக்கான தீர்வைத் தயாரிக்கப் போகின்றன. அதனால் தெரிவுக்குழு விவகாரம் பெரும் திருப்பம் என்றும், இருளில் தோன்றிய ஒளிக்கீற்று என்றும், நாட்டின் பிரதான பிரச்சினை தீர்வதற்கான நம்பிக்கை ஒளி என்றும் அங்கு கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. குழந்தை உரிய முறையில் கருக்கொள்வதற்கு முன்னரே, பெயர் சூட்டி விருந்து வைக்கும் கதையை ஒத்திருக்கிறது அது!

தெரிவுக் குழுவின் தலைவரையும், உறுப்பினர்களையும் நியமிக்கும் உரிமை நாடாளுமன்ற சபாநாயகருக்கே உண்டு. நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 19 ஆவது சரத்து, அதற்கான முழு அதிகாரத்தையும் அவருக்கே வழங்குகிறது. ஆனால் சபாநாயகர், கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து தலைவர், உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்கும் முன்னரே,அரசாங்கம் திரு. மங்கள முனசிங்காவே தலைவராக நியமிக்கப்படுவார் என்று அறிவித்துவிட்டது!

இந்தத் தெரிவுக் குழுவுக்கு 43 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இலங்கையின் நாடாளுமன்றச் சரித்திரத்தில் இதுவே பென்னம் பெரிய தெரிவுக் குழுவாக இருக்கப்போகிறது!

தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கவுள்ள உறுப்பினர்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். இனப் பிரச்சினையை வெவ்வேறு கோணங்களில் பார்ப்பவர்கள். எனவே கருத்திணக்கமும், பொதுத் தீர்வும் எட்டப்படுவது சுலபமான ஒன்றல்ல. அனைத்துக் கட்சி மாநாடு இரண்டு வருடங்களுக்குமேல் நடைபெற்றும் கருத்திணக்கம் காணப்படவில்லை! அப்படியானால் தெரிவுக் குழு...?

தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்க வேண்டும், அந்தச் சுயாட்சி சமஷ்டி அரசமைப்பின் கீழ் அமைய வேண்டும் என்ற அளவுக்கேனும், தென்னிலங்கை அரசியல்வாதிகள் விட்டுக் கொடுக்கும் (Flexible) மனப்பாங்குடன் பிரச்சினையை அணுகுவார்களா என்பதும் மிகமிகச் சந்தேகமே!

எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு, கருத்திணக்கத்துக்கு - வந்துவிட்டால் விடுதலைப் புலிகள் மீது அந்த முடிவைத் திணிக்கலாம் அல்லது அவர்களை அரசியல் ரீதியாக ஒடுக்கலாம், ஓரங்கட்டலாம் என்ற நோக்குடனேயே தெரிவுக்குழுவுக்கு பெரும் முக்கியத்துவமும், அளவுக்கு அதிகமான பிரசித்தமும் வழங்கப்படுகின்றன.தீர்வு எந்தளவுக்குநீதியானதாக, நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதில் எவருக்கும் அக்கறை இருப்பதாகத் தென்படவில்லை.

ஆனால் கொழும்பில் பிரமாதமாக எதிர்பார்க்கப்படும் அளவுக்கு அதன் பெறுபேறுகள் அமையப் போவதில்லை என்று மட்டும் நம்பலாம். கடந்த கால அனுபவம் இதுவே!

## புலிகள் பேச்சு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தான் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என நாம் உறுதியாக நம்புகிறோம். இதுவே எமது அரசியல் இலட்சியமும் கூட. இந்த அரசியல் இலட்சியத்தை அடையவே நாம் போராடி வருகிறோம். தமிழீழத் தனியரசு தவிர்ந்த—ஒரு உருப்படியான மாற்றுத் திட்டத்தினை — ஒரு சுய ஆட்சித் திட்டத்தினை—நாம்பரிசீலிக்கவேண்டுமென சர்வதேச உலகம் எம்மைக் கோரி வருகிறது.

சமாதான வழியில் பேச்சுக்களை நடத்தி, ஓர் அரசியல் தீர்வு காண நாம் முயற்சிக்க வேண்டும் எனவும் உலக சமுதாயம் எமக்கு ஆலோசனை வழங்கி வருகின்றது. இந்தக் கருத்தை நாம் நிராகரிக்கவில்லை. இதனால்தான் நாம் பேச்சுக்களுக்கும் தயாராக இருக்கிறோம்.

**சிங்கள அரசு இணங்காது**

தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கு சிங்கள அரசு ஒரு போதும் இணங்காது என்பது எமக்குத் தெரியாததல்ல. இது பேசிப் பெறும் விவகாரமல்ல. போராடி வென்றெடுக்க வேண்டிய இலட்சியம் என்பது எமக்கு நன்கு தெரியும். தமிழீழ அரசுக்கு மட்டுமன்றி, அதற்குப் பதிலாக, ஓர் உருப்படியான மாற்றுத் திட்டத்திற்கும் சிங்கள அரசு இணங்கப்போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும்.

சிங்களப் பேரினவாதம் தமிழீழ மக்களுக்கு எந்த வகையிலும் நீதி வழங்கத் தயாரில்லை என்பதை சர்வதேச|சமுதாயத்திற்கு உணர்த்தவே நாம் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றத் தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தோம்.

**பரிசீலிக்க தயார்!**

தமிழீழத் தனியரசுக்குப் பதிலாக சமஷ்டி அமைப்பிலான ஒரு பூரண சுயாட்சித் திட்டத்தை அரசு முன்வைக்குமானால் அதனைப் பரிசீலிக்கத் தயார் என நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம். ஆனால் சிங்கள அரசு அது பற்றி சிந்திப்பதாகக் கூடத் தெரியவில்லை. நாம் இதனையிட்டு ஆச்சரியப்படவில்லை. நீண்டகால கசப்பான வரலாற்று அனுபவத்திலிருந்து எமது மக்கள் ஓர் அரசியல் உண்மையை அறிந்திருப்பார்கள்.

அதாவது, சமாதானப் பேச்சுக்கள் மூலமாக ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை பெற்றெடுப்பது இயலாத காரியம் என்பதே அது.

**தேசியப்பிரச்சினையின் அடிப்படை**

தமிழீழம், சமஷ்டி என்ற தீர்வுகள் ஒருபுறமிருக்க, தமிழர் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகளை ஏற்றுக் கொள்ளக்கூட அரசாங்கம் மறுத்துவருகிறது.

தமிழீழ மக்கள் ஒரு தேசிய அமைப்பைக் கொண்டவர்கள் என்பதையும், அவர்களுக்கு வரலாற்று ரீதியாக அமைந்த ஒரு தயாகம் உண்டு என்பதையும், தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தன்னாட்சி உரிமைக்கு அவர்கள் உரித்தானவர்கள் என்பதையும் சிங்கள அரசு மறுத்துவருகிறது.

எமது தேசிய பிரச்சினைக்கு மூலமான இந்த அம்சங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் உருப்படியான ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்ய நாம் இன்றும் தயாராக இருக்கிறோம்.

ஆனால் சிங்கள அரசு இதற்கெல்லாம் இணங்கப்போவதில்லை. அப்படியிருந்தும் நாம் பேச்சுக்களை நிராகரிக்கவில்லை.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அடிப்படையான கோரிக்கைகள் நியாயமானவை என்பதையும்—

சிங்கள அரசு நாகரீகமான முறையில் எமக்கு நீதி வழங்கத் தயாராக இல்லை என்பதையும்—

சர்வதேச சமுதாயத்திற்கு உணர்த்துவதற்காகவே நாம் பேச்சுக்களில் கலந்துகொள்ள ஆயத்தமாக இருக்கிறோம். சிங்களப் பேரினவாதத்தின் விட்டுக் கொடுக்காத, அநீதியான போக்கை உலகம் காலப் போக்கில் உணர்ந்து கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் தான் உலக சமுதாயத்தின் அனுதாபமும், ஆதரவும் எமது போராட்டத்திற்குச் சார்பாகத் திரும்பும்.— என்றார். [உ]

## ஸ்ரீலங்கா....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமானங்கள் இரண்டை வாங்கவும் விமானப்படை திட்டமிட்டுள்ளது.

இந்த ரக விமானங்களை வாங்குவது குறித்தும் இந்தியா ஏற்கனவே அதிருப்தி கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்கூறிய இரண்டு ரக விமானங்களை வாங்குவது குறித்தும் இந்தியா உத்தியோகபூர்வமாக எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லையாயினும்—

உள்ளூரத் தனக்கு விருப்பமில்லை என்று மறைமுகமாக எடுத்துக்காட்டியுள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. [அ]

## திருமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மொறவெவ உட்பட பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இந்த வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்காக ஏற்கனவே ஒன்றரைக் கோடி ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்தே இந்தப் பணம் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]



நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

## கந்தனே மௌனம் ஏனோ!

நம்பினோர்க் கருள்பா லிக்கும்
நாயனே இறையே தமிழர்
துன்பங்கள் தடுத்தாட் கொண்டு
துணை நிற்பாய் நீதி கேட்டு
மங்கையர் இளைஞர் இன்னும்
மற்றுளோர் சிந்தும் செந்நீர்
கங்கையாய் பாயக் கண்டும்
கந்தனே மௌனம் ஏனோ?

—நெடுந்தீவு லக்ஸ்மன்.

## உற்சவகால நிகழ்ச்சிகள்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இசை மற்றும் சமய அரங்குகளில் இன்று வியாழக்கிழமை மாலை நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில்— சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவனின் இன்னிசைக் கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில்— திருமதி மேரிசரோஜா ஜஸ்ரினின் இன்னிசைக்கச்சேரியும், டாக்டர் ரி. கங்காதரனின் புல்லாங்குழல் இசையும்.

★ நல்லூர் ஆதீனம் குருமூர்த்தி ஆலயத்தில்— திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் ''கந்தரனுபூதி'' கதாப்பிரசங்கம்.

★ நல்லூர் மேற்கு பிள்ளையார் கோவில் மண்டபத்தில் —கானகதாவாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இராமாயணத் தொடர் விரிவுரையில் ''சூர்ப்பனகை''.

## வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஆக. 29

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபையின் வெள்ளிவிழா நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுதினமும் நடைபெறும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும் 2 ஆம் நாள் நிகழ்ச்சிகளில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

அன்று இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து பணி செய்த பிரம்மஸ்ரீ ப. நீலகண்ட சர்மா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. நம. சிவப்பிரகாசம், திரு. சு. சிவவாகீசர் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். [த]

## ''உயிர்த்தமனிதர்கூத்து'' நாளை

இன்று வியாழக்கிழமை நடைபெற இருந்த 'உயிர்த்த மனிதர் கூத்து' நாடகம் நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நாடகம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக ஆதரவில் நாடக அரங்கக் கல்லூரி இதனை வழங்குகிறது.

## பிரதம...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு நீதியரசர் திரு. பாரிந்த ரணசிங்க மேலும் குறிப்பிட்டார்.

திரு. பாரிந்த ரணசிங்க பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டது குறித்து 1988 மார்ச்சில் ஐ. தே. க. செயற்குழுவில் அப்போதைய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியதாவது:-

''இவரிலும் பார்க்க கூடிய காலம் சேவையாற்றிய நீதியரசர் வனசுந்தர அங்கிருந்தார்.

ஆனால் பிரதம நீதியரசரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு.

சிரேஷ்ட நீதியரசர்தான் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமல்ல''—என்று திரு. ஜெயவர்த்தனா குறிப்பிட்டிருந்தார். (உ)

## போல்டிக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குற்றம் சாட்டினார்.

இதுவரை 20 நாடுகளும் ஐரோப்பிய சமூகமும் போல்டிக் நாடுகளை அங்கீகரித்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஆக. 29

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க ஆசிரியர், மாணவர், கிராமிய கொத்தணித் தொடர்பாளர்கள், மாணவர் இயக்க உறுப்பினர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும். (இ)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், அக். 29

நல்லூர்க்கந்தன் திருவிழாவை முன்னிட்டு, நல்லூர் முருகன் சனசமூகநிலையத்தினர் சமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்துகின்றனர்.

இதற்கான வினாத்தாள்களை நிலையச் செயலாளரிடமும், நல்லூர் முருகன் ஸ்ரோரிலும் பெற்றுக்கொள்ளலாம். விடைகள் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் வினாத்தாளில் குறிப்பிடப்பட்ட இடங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும், (த)

## பயிற்சியும் கண்காட்சியும்

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தினர் கடந்த 5ஆம் திகதி முதல் நாளை 30ஆம் திகதி வரை பயிற்சிநெறி ஒன்றை நடத்துகின்றனர். இதில் யாழ். மாவட்டத்தின் 8 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து 1:4 சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொள்கின்றனர்.

எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை இந்த ஆசிரியர்களின் செயற்பாட்டினை வெளிப்படுத்தும் கண்காட்சி யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். [த]

## கப்பலில் வந்த உணவுப்பொருள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'வில்லி' கப்பலில் 3 ஆயிரத்து 150 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, ஆயிரத்து 40 மெற்றிக் தொன் மா, 14 மெற்றிக் தொன் பயறு, 180 மெற்றிக் தொன் பருப்பு, 250 மெற்றிக் தொன் சீனி, 15 மெற்றிக் தொன் தேயிலை ஆகியனவும் மற்றும் பால்மா, டீசல் என்பனவும் அடங்கும். [இ-5]

## கைது

சென்னை, ஆழ்வார் பேட்டையில் உள்ள 'துக்ளக்'வார இதழ் அலுவலகத்தின் முன்னால சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

## வேப்பங்குளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றப்பட்டன.

தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிப் போராளிகள் நால்வர் வீரமரணம் அடைந்தனர்.

லெப்ரினன்ட் ஸ்ரீநாத் [மயில்வாகனம் திருச்செல்வம் — செல்வநாயகபுரம், திருமலை], இரண்டாம் லெப்ரினன்ட் பீற்றர் [ஆறுமுகம் பகவத் சிங் — பன்குளம், திருமலை], வீரவேங்கை சுதா [செபமாலை ஜெகதீஸ்வரன் — கன்னியா, திருமலை], வீரவேங்கை ஸ்ரீமனோ [கணபதிப்பிள்ளை ராஜன் — திருஞானசம்பந்தர் வீதி, திருமலை] ஆகியோரே வீரமரணமடைந்தனர். [இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

# உபநயன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி ஸு ஆவணி மீ 14-ஆம் நாள் (30 - 08 - 1991) வெள்ளிக்கிழமை காலை 6 மணி 05 நிமிஷம் முதல் 7 மணி 05 நிமிஷம் வரையும் உள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரர்கள்

**★ சிரஞ்ஜீவி சு. ஜனார்த்தனன் ★**

**★ சிரஞ்ஜீவி சு. கிரிதரன் ★**

ஆகிய இருவருக்கும்

பிரம்மோபதேச யஜ்ஞோபவீத தாரணம் ஆவரங்காலில் உள்ள எமது இல்லத்தில் செய்வதற்கு நிச்சயத்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வந்து சபையை சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்:

பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனசர்மா தம்பதிகள்.

(ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில், பிரதம குரு)

சிவன்கோவிலடி,
ஆவரங்கால்.

நன்றி! (4269)

## இளம் பெண் மரணம்

தென்மராட்சி, ஆக. 29

கணவரால் தாக்குண்டதாகக் கூறப்படும் இரு குழந்தைகளுக்குத் தாயாரான இளம் பெண் ஒருவர் [வயது 21] மரணமான சம்பவம் முகமாலை பொரந்தர் குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

இயக்கச்சி சங்கத்தார் வயல் பகுதியில் இருந்து இவர்கள் இடம்பெயர்ந்து வந்திருந்தனர் என்றும்—

சம்பவதினம் சமைத்த உணவு தொடர்பாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

[இ-117]

## பிரிட்டிஷ் பிரதமர் மாஸ்கோவுக்கு

லண்டன், ஆக. 29

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சோவியத் தலைநகர் மாஸ்கோவுக்கு விஜயம் செய்கிறார்.

(இ-எ)

## வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகம்

# கிராமிய குழுக்கள் அமைத்தல்

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாதிப்புற்ற மக்கள் நலன் கருதி அமைக்கப்பட்ட மேற்படி கழகத்தின் கிராமிய குழுக்கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் அமைக்கப்படவிருக்கின்றன. குறித்த கிராம சேவையாளர் பிரிவு மக்கள் அனைவரும் இக் கிராமிய குழுக்கள் அமைக்க குறித்த இடங்களுக்கு சமூகம் தந்து ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

காலம்: 31 - 08 - 1991 சனிக்கிழமை காலை 9.00 மணி

இடம்: மல்லாகம் மகா வித்தியாலயம்.

| கி. சே. பிரிவுகள் பெயர் | இல. | கி. சே. பிரிவுகள் பெயர் | இல. |
|---|---|---|---|
| மல்லாகம் தெற்கு | 212 | தெல்லிப்பளை கிழக்கு | 227 |
| மல்லாகம் மத்தி | 213 | தெல்லிப்பளை | 228 |
| மல்லாகம் வடக்கு | 214 | துர்க்காபுரம் | 229 |
| பளை வீமன்காமம் வடக்கு | 236 | தந்தை செல்வாபுரம் | 230 |
| பளை வீமன்காமம் தெற்கு | 237 | மயிலிட்டி வடக்கு | 246 |

காலம்: 01 - 09 - 1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்: மருதனாமடம் இராமநாதன் கல்லூரி.

| கி. சே. பிரிவுகள் பெயர் | இல. | கி. சே. பிரிவுகள் பெயர் | இல. |
|---|---|---|---|
| காங்கேசன்துறை மேற்கு | 233 | குரும்பசிட்டி | 242 |
| காங்கேசன்துறை மத்தி | 234 | குரும்பசிட்டி கிழக்கு | 243 |
| காங்கேசன்துறை தெற்கு | 235 | பலாலி வடக்கு | 254 |
| கட்டுவன் | 238 | பலாலி வட மேற்கு | 255 |
| கட்டுவன் மேற்கு | 239 | பலாலி மேற்கு | 256 |
| தென் மயிலை | 240 | மயிலிட்டித்துறை தெற்கு | 248 |
| வறுத்தலைவிளான் | 241 | மயிலிட்டித்துறை வடக்கு | 251 |
| தையிட்டி கிழக்கு | 247 | தையிட்டி வடக்கு | 249 |
| | | தையிட்டி தெற்கு | 250 |

காலம்: 01 - 09 - 1991 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.00 மணி

இடம்: அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

| கி. சே. பிரிவுகள் பெயர் | இல. | கி. சே. பிரிவுகள் பெயர் | இல. |
|---|---|---|---|
| அளவெட்டி வடக்கு | 215 | அள. கணேஸ்வரம் | 218 |
| அளவெட்டி மத்தி | 216 | அளவெட்டி கிழக்கு | 217 |
| அளவெட்டி தெற்கு | 219 | மாவிட்டபுரம் | 231 |
| அளவெட்டி மேற்கு | 220 | மாவிட்டபுரம் தெற்கு | 232 |

காலம்: 08 - 09 - 1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 00 மணி

இடம்: புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

| கி. சே. பிரிவுகள் பெயர் | இல. | கி. சே. பிரிவுகள் பெயர் | இல: |
|---|---|---|---|
| வயாவிளான் கிழக்கு | 244 | பலாலி தெற்கு | 252 |
| வயாவிளான் மேற்கு | 245 | பலாலி கிழக்கு | 253 |

காலம்: 08 - 09 - 1991 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 - 00 மணி

இடம்: இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்

| கி. சே. பிரிவுகள் பெயர் | இல. |
|---|---|
| இளவாலை வடக்கு | 221 |
| இளவாலை வடமேற்கு | 222 |
| நகுலேஸ்வரம் | 226 |

காலம்: 08 - 09 - 1991 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 - 00 மணி

இடம்: பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை

| கி. சே. பிரிவுகள் பெயர் | இல. |
|---|---|
| வித்தகபுரம் | 223 |
| பன்னாலை | 224 |
| கொல்லன்கலட்டி | 225 |

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு குறித்த நேரத்திற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் சமூக சேவையாளர்கள், நலன் விரும்பிகள், சமூகசேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் சமூகம் தந்து ஒத்துழைப்பு நல்கும்வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தெல்லிப்பளை,
27 - 08 - 1991.

வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி சிவராஜா

திருமதி மகேஸ்வரி சிவராஜா 26 - 08 - 1991 இல் லண்டனில் காலமானர். அன்னார் ஆதிமயிலிட்டி சுவாமிநாதன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற இளவாலையைச் சேர்ந்த க. சிவராசாவின் [முன்னாள் அதிபர், யாழ்ரன் கல்லூரி, காரைநகர்], அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி சாரதா சிவஞானவேல் (U.K.), கோபாலன் (U.K.), சகுந்தலா குமாரசிங்கம் [Colombo], இரகுபாலன் [U K ], ஜெயபாலன் (Newzealand) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி இராஜேஸ்வரி முதலியார், காலஞ்சென்ற ஆனந்தக்குமாரசாமி, திருமதி புவனேஸ்வரி சண்முகலிங்கம், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தம், ஸ்ரீபாஸ்கரன், பேராசிரியர் சுசீந்திரராஜா, வைத்திய கலாநிதி மகேந்திரன், பொறியியலாளர் பாலேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்.

மல்லாகம். [17970]

## திருமதி செல்லம்மா அருணாசலம்

ஈவினை, புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சி. அருணாசலத்தின் அருமை மனைவி செல்லம்மா காலமானார். இவர் பாலச்சந்திரன் (Malasiya), விவேகானந்தன் (Germany), சந்திரா (Canada) அவர்களின் அன்புத் தாயாரும், பத்மநாதன் [பொறியியலாளர், கனடா] திருமதி பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வரத்தினம், க. குணரத்தினம்(Chartered Accountant) ஆகியோரின் அன்புச் சகோதரியும். பிரதிபா, அனுஷா, மிதுலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழன் காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈவினை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

த. சிவபாலன்
சிறாப்பர்

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன். [17975]

## திருமதி முத்தையா [செல்லையா] நல்லம்மா

திருமதி முத்தையா (செல்லையா) நல்லம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வெளிச்சம்-செல்லையாவின் அன்புமனைவியும், சாந்தநாயகி, தையல்நாயகி (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (யா/மாநகர சபை), குருநாதன் (பிரான்ஸ்), சண்முகநாதன் (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புத்தாயாரும், கு.இ.இராசநாயகம் (யா/மாநகர சபை], சு அன்ரன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி சிவகாமசுந்தரி (பிரான்ஸ்), தனலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஷன், மயூரன், தனுஷா, செந்தூரன் (பிரான்ஸ்), சர்மிளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலஞ்சென்ற ப. இராசரத்தினம், புஸ்பவதி, புஸ்பராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29 8-91) தகனக் கிரியைகளுக்காக 24, அராலி வீதி, ஒட்டுமடம் இல்லத்திலிருந்து முற்பகம் 11 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(17681) மு. தனபாலன்

## ஒங்காரவடிவேலு வையாபுரி

வையாபுரி [இளைப்பாறிய தபால் அதிபர், திருக்கேதீஸ்வரம்] காலமாகிவிட்டார்.

இவர் ராஜராஜேஸ்வரன் [கிராம அபிவிருத்தி அலுவலர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சாவகச்சேரி], ராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரி, Dr. கல்வளை ராஜன் [அரசினர் வைத்தியசாலை, டிக்கோயா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இல. 41, பலாலி வீதி இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு 29-8-91 வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

(17682) வை. ராஜராஜேஸ்வரன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org